6311 ★ தொலைபேசி : 551331 ★ தோற்றம் : 1953 ★ ... ★ ...

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ.

மலர் : 20] சென்னை : கார்த்திகை 16 (1—12—72) வெள்ளி · வெளியீடு : கார்த்திகை 17 (2—12—72) சனி [இதழ் : 140

இடை... செய்வோர், ... சினிமா பார்த்தபடியே ... செய்ய லாம்.

அரியானு மாநில அரசுக்குச் சொந்தமான பஸ் நிறுவனம், அடுத்த வெள்ளிக்கிழமை முதல் குளிர்சாதன வசதியுடன் கூடிய பஸ் ஒன்றைவிட ஏற்பாடு செய்துள்ளது; அதில், சினிமாப் படம் திரையிடப்படும்; இதற்காகக் கூடுதல் கட்டணம் எதுவும் வசூலிக்கப் படமாட்டாது.

'இராஜபார்ட்' நடிகர் 'பபூன்பார்ட்' ஆகிருர்

அரசியல் வித்தகரின் அபூர்வ யோசனை

'நாடக மேடை வசன'த்திற்கு மக்கள் மதிப்பு அளித்தனரா?

"இலஞ்ச ஊழல் புகார்க் குற்றச்சாட்டுக்களுக்கு முதல்வர் பதில் அனுப்பவில்லை என்பதற்காகக் காத்திராமல் மத்திய அரசு உடனடியாக விசாரணைக் குழு அமைக்க வேண்டும்; அதனைத் தொடர்ந்து தி.மு.க. மந்திரி சபை இராஜிநாமா செய்யவேண்டும்; மக்களின் (?) இந்தக் கோரிக்கைக்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என்று நம்புகிறேம்."

—நிருபர்கள் கூட்டத்தில் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்

'இராஜபார்ட்' வேடக்காரர், நாடக மேடையில் பேசும் வசனத்தைப்போல, மத்திய அரசுக்கு மடமடவென்று உத்தரவு போட்டுவிட்டார் புரட்சித் தலைவர்! எதிரிலே அமர்ந்திருந்த நிருபர்களும் அதைக் கேட்டுக்கொண்டு திரும்பியிருக்கிருர்கள்!

இந்த 'வசன'த்தைப் போட்டு — 'மத்திய அரசுக்கு எம்.ஜி.ஆர். யோசனை' என்று கொட்டை எழுத்தில் ஐந்துக் கலத் தலைப்பும் தந்து — ஒரு நாள் 'பிழைப்பை' நடத்தியிருக்கிறது ஒரு பரம்பரைப் மாலை ஏடு!

மத்திய அரசுக்குச் சொல்லப்பட்ட அந்த 'அபூர்வ' யோசனை என்ன — என்று பத்திரிகையை வாங்கிப் பார்த்தவர்களெல்லாம், 'ஏன் இந்த மானங்கெட்ட பிழைப்பு இவர்களுக்கு' என்றுதான் முணுமுணுத்தார்களே தவிர, 'ஆகா — புரட்சித் தலைவரின் யோசனையே யோசனை; இந்த யோசனை வேறு யாருக்கு வரும்?' என்று மூக்கின்மேல் கைவைத்துவிடவில்லை!

இந்த 'மக்கள் கோரிக்கை'க்கு மத்திய அரசு செவிசாய்த்தே ஆக வேண்டும்' என்றும் எந்தப் புத்திசாலியும் கூறவில்லை!

'நாட்டில் நடப்பது அரசியல் சட்ட முறையிலான சனநாயக ஆட்சியா — அல்லது எம்.ஜி.ஆர். தோட்டத்து நிர்வாகமா — என்றுதான் பலரும் பேசிக்கொண்டார்கள்!

நல்ல வேளை — 'மத்திய அரசு' என்று பொதுவாகச் சொல்லிவிட்டார்; குடியரசுத் தலைவருக்கே உத்தரவு போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

மந்திரி சபைமீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு என்ன?—மக்களுக்கே தெரியாது! பின்னர் எப்படி, 'மந்திரி சபை இராஜிநாமா செய்ய வேண்டும்' என்று கேட்கிருர்கள்? யார் அந்த 'மக்கள்?'

'மக்களின் தலைவனான நான் கூறுகிறேன்—நான் கூறினாலே மக்கள் கூறினதாகத்தான் அர்த்தம்' என்கிருர் இந்தப் புத்தம் புதிய அரசியல் வித்தகர்!

முன்பு, 'நான்தான் கழகம்—கழகம்தான் நான்' என்ருர்! எண்ணி எட்டு நாளுக்குள், 'கழகம் வேறு—இவர் வேறு' என்று ஆகிவிட்டது!

இப்போது, 'நான்தான் மக்கள்—மக்கள்தான் நான்' என்கிற தோரணையில், மத்திய அரசுக்கே உத்தரவு போடுகிருர்!

மக்கள் வேறு—இவர் வேறு என்பது, சென்ற ஞாயிற்றுக்கிழமையே வெட்டவெளிச்சமாகி விட்டது!

சட்டமன்ற உறுப்பினர்களிடம் மகஜர் கொடுத்த மக்களைத் தேடி அவர் அலைந்த அலைச்சல் — பட்டபாடு — அவருக்கல்லவா தெரியும்! இன்னும் ஏன் இவர், 'மக்கள் — மக்கள்' என்று புலம்பிக் கொண்டிருக்கிருர்!

இவருடைய பேச்சையும் — நடவடிக்கைகளையும் பார்த்தால், இராஜபார்ட் நடிகராகக்கூடத் தெரியவில்லை! அசல் 'பபூன்பார்ட்' நடிகராக அல்லவா இருக்கிருர்!

—'சேனு'

'கணக்கு வாத்தியார்' காட்டப்போகும் 'கணக்கு'

'என்னுடைய சொத்துக் கணக்கை எனது ஆடிட்டர் அனுப்பிவைப்பார்; இன்னும் இரண்டொரு நாட்களில் வெளியிடப்போகிறேன்."

—ஒரு மாதத்துக்கு முன்னர் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்

"என் வருமான வரிக் கணக்கு அப்பீலில் இருக்கிறது; அதன் தீர்ப்பு வந்த பிறகுதான் நான் என் கணக்கை வெளியிட முடியும்."

30—11—72-ல் ஒட்டுக் காங்கிரசுத் தலைவர்

வருமான வரிக் கணக்கு அப்பீல் செய்தது எப்போது? நேற்றுதானு?

இரண்டொரு நாட்களில் கணக்கை வெளியிடுவேன்' என்று சொன்னபோது, 'அப்பீல்' இல்லையா?

அதிருக்கட்டும்; வருமான வரிக் கணக்கில் என்ன தகராறு?

அப்போதைக்கு அப்போது — உள்ளது உள்ளபடி கணக்கு எழுதிக் காட்டி, வருமான வரியும் செலுத்தக்கூடிய அப்பழுக்கற்ற வாய்மை வீரர்' இவர் என்பது, வருமான வரி இலாகாவுக்குத் தெரியாமல் போனது ஏன?

'நல்லவருக்குத்தான் சோதனைகளெல்லாம் வரும்' என்பார்கள்; பாவம் — இந்த நல்லவரைத்தான் துருவித் துருவித் துளைத்துச் சோதிக்கிறது — பொல்லாத வருமான வரி இலாகா!

தமிழ்நாட்டுக்கு யார் தலைவர்?

அப்பாவி :—"எம்.ஜி.ஆர். கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் யார்?"

அரசியல்வாதி :—"இதில் சந்தேகம் என்ன — எம். ஜி. ஆர். தான்!"

அப்பாவி :—"கருநாடக மாநிலத்தில் எனது கட்சிக்கு ஒரு கன்னடர்தான் தலைவராக இருப்பார் — என்று பெங்களூரில் எம். ஜி. ஆர். கூறியிருக்கிருரே!"

அரசியல்வாதி :—"அப்படியென்ருல், தமிழ்நாட்டுக்கு ஒரு 'தமிழர்'தான் தலைவராக இருப்பார்!"

அப்பாவி :—"அதைத்தான் கேட்டேன்; அந்தத் தமிழர் யாராக இருப்பார்?

அரசியல்வாதி :—"நிச்சயமாக எம். ஜி. ஆரோ — மனோகரனோ இருக்கமுடியாது!"

புதுடில்லி, நவ. 30—

"தொழிலாளர்கள் பிராவிடண்டு நிதி — குடும்பப் பென்ஷன் நிதிச் சட்டத்தைப் பீடித் தொழிலுக்கும் விரிவுபடுத்துவது பற்றி அரசு ஆலோசித்து வருகிறது"

என்று மக்களவையில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆர். கே. காடில்கர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

மதியழகனுக்குக் கறுப்புக் கொடி

சென்னை—ஆயிரம்விளக்குப் பகுதி தி. மு. க. அறிவிப்பு

சென்னை, நவ. 30—

ஆயிரம்விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே. ஏ. மதியழகன் தொகுதி மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டதாலும் — கழகத் தோழர்களின் உழைப்பின் மூலம் வெற்றிபெற்ற அவர் கழகத் தோழர்களின் உழைப்பின் மூலம் வெற்றிபெற்ற அவர் கழகத்திற்கு எதிராகச் செயல்படுவதாலும் அவரை எதிர்த்துக் கண்டன ஊர்வலம் — கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் — தொடர் உண்ணுநோன்பு ஆகியவை மேற்கொள்வதுபற்றி நடவடிக்கை எடுக்க மு. அரங்கநாதன் எம்.சி. தலைமையில் போராட்டக் குழு ஒன்றை அமைப்பது என்று ஆயிரம் விளக்குப் பகுதிக் கழகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆயிரம்விளக்குப் பகுதி தி. மு. கழகக் கூட்டம் திரு.மு.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது.

பகுதி நிர்வாகிகள்—மாநகராட்சி உறுப்பினர்கள்—வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் போராட்டக் குழு உறுப்பினர்களாக இருப்பார்கள்.

"2—12—72 அன்று ஆயிரம் விளக்குப் பகுதிப் பேரணி அண்ணு சமாதியிலிருந்து புறப்பட்டு மதியழகன் அவர்களுக்குக் கறுப்புக் கொடி காட்டுவது என்று முடிவு எடுக்கப்பட்டது"

என்று பகுதிச் செயலாளர் அ. ஜார்ஜ் அறிவிக்கிருர்.

சபாநாயகர் தமது உறுதிமொழியை காப்பாற்றுவாரா?

ஆற்காடு வீராசாமி அறிக்கை

சென்னை, நவ. 30—

"சபாநாயகர் கே. ஏ. மதியழகன்மீது தி. மு. கழகம் மற்றும் தோழமைக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர் 184 பேர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொடுத்திருக்கிருேம்.

"டிச. 2-ந் தேதி கூடும் சட்டமன்றக் கூட்டத்தில் அந்தத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் சபாநாயகர் அளித்துள்ள உறுதி மொழிக்கேற்ப வற்புறுத்துவோம்; சென்ற கூட்டத்தில் அளித்த உறுதி மொழியை திரு. மதியழகன் காப்பாற்றுவார் என்று எதிர்பார்க்கிருேம்"

என்று, ஆற்காடு ந. வீராசாமி எம்.எல்.ஏ. விடுத்திருக்கும் அறிக்கையில் கூறியிருக்கிருர்.

மீண்...வர்கள்!

திருச்சி, நவ. 30—

"வரும் சட்டமன்றக் கூட்டத்தில், தமிழ்நாடு அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்படும்"

என்று, வலதுசாரி கம்யூனிஸ்டுக் கட்சியின் மாநிலச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம். கல்யாணசுந்தரம், செய்தியாளரிடம் தெரிவித்தார்.

"தமிழ்நாடு சட்டமன்றத்தை டிச. 2-ந் தேதி கூட்ட ஆளுநர் ஆணை பிறப்பித்திருப்பதால், எதிர்க் கட்சியினர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரலாம்"

என்று, சட்டமன்ற வலது கம்யூனிஸ்டுத் தலைவர் கே.டி.கே. தங்கமணி மதுரையில் கூறினுர்.

விமானம் மூலம் தேட முதலமைச்சர் கட்டளை

சென்னை, நவ. 30—

இராயபுரம் கடற்கரையிலிருந்து மீன் பிடிப்பதற்காக இம்மாதம் 21-ந் தேதியன்று புறப்பட்டுச் சென்ற 5 மீனவர்கள் இன்னும் திரும்பி வரவில்லை. அவர்கள் கடலில் எங்காவது சிக்கிக் கொண்டிருக்கிருர்களா என்பதைக் கவனித்து வருமாறும் வர்த்தகக் கப்பல்களுக்கும் — படைக் கப்பல்களுக்கும் — தமிழ்நாடு அரசு செய்தி அனுப்பியிருந்தது.

ஆனால் இந்த முயற்சிகளெல்லாம் இதுவரையில் பலன் அளிக்காததால், இவர்களை விமானம் மூலம் தேடிப் பார்க்குமாறு முதலமைச்சர் கலைஞர் உத்தரவிட்டிருக்கிருர்.

வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் யார்?

முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

சென்னை, நவ. 30—

"தமிழ்நாட்டில் கடந்த சில வாரங்களாக நடைபெறும் வன்முறைச் செயல்களை வலது கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு ஈடுபட்டிருக்கிறார்கள்; இவர்களுக்கு எம். ஜி. ஆர். கட்சியினர் உடந்தையாக இருக்கிறார்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் குறி[illegible] மாவட்டம் பரமத்தி–வேலூரில் நடைபெற்ற சம்[illegible] [illegible] அவர் [illegible]

"சேலத்தில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு மாலை 6 மணிக்கு ப[illegible]த்துப்பட்டி கூட்டத்திலும், [illegible] சேர்[illegible] கலம் கூட்[illegible] வேலூர் (சேலம்) [illegible] போது போலீசு அதிகாரிகள் 'வேலூரில் நிலைமை சரியாக இல்லை; ஆகவே அங்கு செல்ல வேண்டாம்' என்று கூறினர்கள்; விவரம் விசாரித்தபோது வன்முறைக் கூட்டம் ஒன்று அன்று மாலையிலிருந்து பஸ்கள் மீதும் — கடைகள் மீதும் கல் வீசிக் கொண்டிருக்கிறது என்றும் பொதுக்கூட்ட மேடையைத் தகர்ப்பதற்காகச் சென்ற வன்முறைக் கூட்டத்தை அனுமதிக்காமல் கழகத் தோழர்கள் பாதுகாத்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள்.

பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கக்கூடும்

அதற்கிடையே மின்சார டிரான்ஸ்பார்மர் சேதப்படுத்தப்பட்டு அந்த ஊரே இருளில் மூழ்கிக் கிடக்கிறது என்று அறிவிக்கப்பட்டது.

அந்த நிலையில் நான் அங்கு சென்றிருந்தால் பயங்கர விளைவுகள் ஏற்பட்டிருக்கக் கூடும்; ஆகவே நான் சேலம் திரும்பி சென்னை வந்து சேர்ந்தேன்.

கிடைத்த தகவல்படி மின்னொளியைத் துண்டித்தவர்கள் பொதுக் கூட்ட மேடையையும் சிதைத்து உடைத்துவிட்டதாகவும், சில குடிசைகளுக்குத் தீயிட்டுவிட்டதாகவும், மூன்று போலீசுக்காரர்களை அந்த இருட்டில் கட்டிப் போட்டுவிட்டு போய்விட்டதாகவும், அதன் பிறகு போலீசார் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாகவும் — கண்ணீர்புகை பிரயோகம் காரணமாகவும் இரவு 2 மணிக்கு நிலைமை கட்டுக்கு அடங்கி வன்முறைக் கூட்டத்தினர் விரட்டப்பட்டதாகவும் செய்தி வந்துள்ளது.

"மாவட்ட வருவாய் அதிகாரி — வருவாய் வட்ட அதிகாரி போன்ற அதிகாரிகள் சுமார் இருபது பேர்கள்வரை கல்வீச்சு காயங்களுக்கு ஆளாகியிருப்பதாகவும் தகவல் வந்துள்ளது; நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்" என்று செய்தி கிடைத்துள்ளது என்றார்.

செய்தியாளர்:— "போலீசு நிலையங்களைத் தாக்குவது — பஸ் எரிப்பு—பஸ்கள்மீது கல்வீசிச் சேதப்படுத்துவது போன்ற வன்முறைச் செயல்கள் தொடர்ந்து நடைபெறுகின்றனவே—போலீசு விசாரணையில் இந்த வன்முறைச் செயல்களுக்குப் பின்னணியில் இருந்து தூண்டிவிடுவது யார் என்பது தெரிந்ததா?"

முதலமைச்சர்:— "வலதுசாரி கம்யூனிஸ்டுகள் திட்டமிட்டு இந்த வன்முறைச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்; அவர்களுக்கு எம். ஜி. ஆர். கட்சியினரும் உடந்தையாக இருக்கிறார்கள்."

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

நாமக்கல் தாலுகா முழுவதிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும், மூன்று போலீசு வான்கள் — மூன்று அரசு பஸ்கள் — இரண்டு தனியார் வண்டிகள் சேதம் அடைந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

[illegible] மார்க்க வேண்[illegible]

கோரத்துக்கு—துவேஷத்துக்கும் அப்பாற்பட்ட நாகரிக அரசியலை ஒரு கலைஞரிடமிருந்து எதிர்பார்க்க எனக்கு உரிமை உண்டு; பல்லாண்டுக் காலம் கலைத் துறையிலேயே ஈடுபட்டிருந்த ஒருவர் கட்சி நடத்த முன்வந்தால், அதன் விளைவு இப்படித்தான் இருக்க வேண்டும்?

இது கலை வழி அல்ல — கொலை வழி; இதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சதிகாரர்களின் கொடிய செயல்களிலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிப் பிழைத்த கலைஞரை வாழ்த்துகிறேன்.

இன உணர்ச்சியுடைய தமிழர்கள் இதுபோன்ற வன்செயல்களை இனியும் சகித்துக் கொண்டு இருக்கமாட்டார்கள் என்று தமிழின் ஆட்சிக்கு எதிராக ஈடுபடுவோரை எச்சரிக்கிறேன்."

வன்முறையின் உச்சக் கட்டம்

ஏ. ஆர். பெருமாள் வேதனை

திரு. ஏ. ஆர். பெருமாள் (பார்வர்டு பிளாக்) கூறியதாவது:—

"பரமத்தி வேலூரில் மின்சார டிரான்ஸ்பார்மரைத் திட்டமிட்டுக் கொளுத்தி — ஊரை இருளாக்கி—முதல்வர் வருகிற போது அவரைத் தாக்க நடந்துள்ள சதிச்செயல் பற்றிப் பத்திரிகைகளில் பார்த்ததும் திடுக்கிட்டேன்.

சனநாயகத்துக்கு இவ்வளவு பெரிய ஆபத்தைத் தமிழகம் எப்போதும் சந்தித்ததில்லை!

ஊரை இருட்டாக்கி மாநிலத்தின் முதல்வரையே தாக்கத் திட்டமிட்டுச் செயல்படுகின்ற அளவுக்கு வலது கம்யூனிஸ்டுகளும் — எம். ஜி. ஆர். கட்சியினரும் துணிந்துவிட்டபின்பு, சனநாயகத்தால் எவ்வளவு கோரமாக அவமானப்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதைக் கண்டு தமிழ்ச் சமுதாயம் இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

வலது கம்யூனிஸ்டுகளும் — எம். ஜி. ஆர். கட்சியினரும் கடந்த சில மாதங்களாக நடத்திவந்த வன்முறைகளின் உச்சக்கட்டமாகப் பரமத்தி—வேலூரில் பயங்கரச் சம்பவம் நடைபெற்று இருக்கிறது.

இந்த இரு கட்சியினருக்கும் நான் ஒன்று கூறிக்கொள்கிறேன் — நீங்கள் எவ்வளவு முயன்றாலும் இந்திய மண்ணில் வளர்ந்து வானுயர நிற்கும் சனநாயகப் பண்புகளை உங்களால் அழித்துவிட முடியாது; இரத்தம் சிந்தி — அவசியம் ஏற்பட்டால் உயிரைக் கொடுத்தாவது சனநாயகத்தைக் காத்தே தீருவோம் என்று கூறிக்கொள்கிறேன்."

'வேதனையடைந்தேன்'

கே. சந்தானம் கண்டனம்

முன்னாள் கவர்னர் கே. சந்தானம் அவர்கள் இத் தொடர்பில் கூறியதாவது:—

"சேலத்திற்கு அருகில் முதலமைச்சரைத் தாக்க முயற்சி நடைபெற்றதை அறிந்து மிக்க வருத்தமடைந்தேன்; இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

இதுபோன்ற வன்முறைகள், தமிழ்நாட்டிற்கும் பெரும் கெடுதலையே ஏற்படுத்தும்."

கூவம் ஆற்றில் விடப்படும் படகுகள்

சென்னை, நவ. 29—

கூவம் ஆற்றில் போக்குவரத்துப் படகுகள்விடத் தமிழக அரசுமுடிவு செய்திருக்கிறது.

இந்தப் படகுகள் மின்சாரத்தில் இயங்குவதாக இருக்கும்; கூவம் ஆற்றின்மேல் மின்சாரக் கம்பிகள் போடப்பட்டு — அதிலிருந்து மின்சாரம் எடுத்துப் படகுகள் ஓட்டப்படும்.

முதலில் 6 பிளாஸ்டிக் படகுகள் விடப்படும்; ஒவ்வொரு படகிலும் 40 பேர் உட்கார்ந்துசெல்ல வசதி செய்யப்பட்டிருக்கும்.

[illegible]கமாண்டர் — இன் — சீப் ப[illegible]த்திலிருந்து கேப்பியர் [illegible]லம் வரையில் படகுப் போக்குவரத்து இருக்கும்; இதற்கு ஒரு ஆளுக்கு முழுக் கட்டணம் 25 காசு வீதம் வசூலிக்கப்படும்.

கூவம் ஆற்றின் ஓரங்களில் ஏற்கனவே ஏராளமான படகுத் துறைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன; இந்தப் படகுத் துறைகளில் பயணிகள் ஏறவும் இறங்கவும் வசதி செய்யப்படும்.

பயணிகள் போக்குவரத்துப் படகு ஒருபுறம் போய்க்கொண்டிருக்கையில், மறுபுறம் உல்லாசப் படகுகள் போகவும் இடவசதி இருக்கும்.

சேலத்தில் முதலமைச்சர்

இரயில் நிலையத்தில் மகத்தான வரவேற்பு

செயல் வீரர்கள் கூட்டத்தில் பங்கேற்பு

சேலம், நவ. 29—

இன்று காலை சேலம் புகைவண்டி நிலையத்தில் முதலமைச்சருக்கு மிகச் [illegible]மான வரவேற்பு அளி[illegible] [illegible]தோழர்[illegible] மாலைகளையும்—கைத்தறி ஆடைகளையும் அணிவித்தனர்.

சேலம் மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., ஜெயராமன் எம்.எல்.ஏ., மாரிமுத்து எம்.எல்.ஏ., ஜெ. கே. கே. சுந்தரம் மற்றும் ஏராளமான கழகத் தோழர்கள் திரண்டிருந்து வரவேற்றனர்.

புகைவண்டி நிலையத்திலிருந்து புறப்பட்ட முதலமைச்சர் சேலம் 1-வது வட்ட தி. மு. க. செயலாளர் தாவுத் இயற்கையெய்தியதை யொட்டி அவரது உடலத்திற்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

முதலமைச்சருடன் அமைச்சர் க. இராசாராம், ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி., ஜெயராமன் எம்.எல்.[illegible] மற்றும் [illegible]ழர்கள் [illegible] மறைந்த [illegible] தோழர் தாவுத் அவர்[illegible]க்குத் தமது மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர்.

செயல்விளக்க கூட்டம்

சேலம் மாவட்ட தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டம் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கழகச் செயல் வீரர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி. வரவேற்றார்.

மறைந்த கழகத் தோழர் தாவுத் அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் விதத்தில் இரண்டு நிமிடநேரம் அனைவரும் மவுனமாக இருந்தார்கள்.

வட்டச் செயலாளர்களான திருச்செங்கோடு நடேசன், சேலம் கே. ஏ. கழனி, இராசிபுரம் அத்தியண்ணன், ஆத்தூர் இராமசாமி, சங்ககிரி பண்டரிநாதன் எம்.எல்.சி, நாகரத்தினம், மேட்டூர் பாலு, நாமக்கல் வையாபுரி, சேலம் நகரப் பொறுப்பாளர் மாரியப்பன், மா. முத்துசாமி எம்.பி, செ. கந்தப்பன் எம்.எல், நடிகமணி டி. வி. நாராயணசாமி, அமைச்சர் க. இராசாராம் ஆகியோர் பேசியபின் முதலமைச்சர் கலைஞர் பேருரையாற்றினர்.

இந்தியைத் திணிக்கும் முயற்சியில் ஏற்பட்ட பலன் என்னவோ?

ரொக்கப் பரிசுகளை அதிகரித்திருந்தும் மத்திய அரசு ஊழியர் அக்கறை செலுத்தவில்லை?

புதுடில்லி, நவ. 28—

மத்திய ஊழியர்களுக்கென குறிப்பிடப்பட்டுள்ள இந்தித் தேர்வுகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் கடந்த ஜுன்—ஜுலை முடிய சுமார் 2.82 இலட்சம் ஊழியர்கள் தேறியிருக்கின்றனராம்.

சுமார் 13,057 ஊழியர்கள் மட்டுமே இந்தி மொழித் தட்டெழுத்துத் தேர்வுகளிலும், 3,133 ஊழியர்கள் இந்தி சுருக்கெழுத்து தேர்வுகளிலும் வெற்றிபெற்றிருக்கின்றனராம்.

என்றாலும், 3,04,154 பேர் இந்தி மொழிப் பயிற்சியையும், 19,797 பேர் இந்தித் தட்டெழுத்துப் பயிற்சியையும், 8,722 பேர் இந்தி சுருக்கெழுத்துப் பயிற்சியையும் பெறவேண்டியவர்களாக உள்ளனராம்.

பயிற்சி முயற்சிகளை மேம்படுத்துவதற்கென அவ்வப்போது பல்வேறு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றனவாம்; அமைச்சரகத்திலுள்ள அதிகாரிகளுக்கு இந்தி கற்றுத்தர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவாம்.

இந்தி மொழிப் பயிற்சி நிலையம் இல்லாத இடங்களிலுள்ள ஊழியர்களுக்கும் — முதல் வகுப்பு அதிகாரிகளுக்குமென தபால் மூலம் இந்திமொழி கற்பிப்பதற்கான வழிகள் செய்யப்பட்டுள்ளனவாம்.

குறிப்பிட்ட இந்தித் தேர்வுகளில் வெற்றிபெறுவோர்க்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுகளின் தொகை அளவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறதாம்; அத்துடன், வயதுவந்த ஊழியர்களுக்கேற்ற வகையில் பாடப் புத்தகங்களும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவல்களை, மாற்றியமைக்கப்பட்ட இந்தி ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டத்தில் பேசுகையில், உள்துறை இணையமைச்சர் கே. ஜி. பந்த் தெரிவித்திருக்கிறார்.

நியாய விலையில் பண்ட விநியோகம்

நிரந்தர ஏற்பாடு— மத்திய அமைச்சர் தகவல்

மேலும் பல பண்டங்களைச் சேர்க்கவும் முடிவு

புதுடில்லி, நவ. 30—

"பொதுமக்களுக்கு இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலையில் கிடைக்கும் அளவில் அரசாங்க விநியோக[illegible] இனி ஒரு நிரந்தர [illegible]கவே சுதப்பாற்கு அரசு உறுதியாக முடிவு செய்திருக்கிறது"

என்று நாடாளுமன்ற மேலவையில், விவசாயத் துறைத் [illegible] அமைச்சர் ஏ. பி. ஷிண்டே தெரிவித்தார்.

"நியாய விலைக் கடைகள் மூலம் நடக்கும் விநியோகத்தை, அவசர நிலைமைகளை சமாளிப்பதற்கான நடவடிக்கையாக மட்டும் கருதி விடக் கூடாது" என்பதை அமைச்சர் ஒப்புக்கொண்டார்.

கேள்வி:—"இப்போது நியாய விலைக் கடைகளில் வழங்கும் பண்டங்களுடன் மேலும் இன்றியமையாப் பண்டங்களும் சேர்க்கப்படுமா?"

அமைச்சர்:—"சேர்க்கப்படும்."

கேள்வி:—"இலஞ்ச ஊழல்காரர்களுக்கு நியாய விலைக் கடைகள் ஒதுக்கப்படாமல் பார்த்துக் கொள்ளப்படுமா?"

அமைச்சர்:— "கூட்டுறவுகள்—ஊராட்சி மன்றங்கள் போன்றவைகளுக்கு நியாய விலைக் கடைகளை ஒதுக்கவே முயற்சிக்கப்படுகிறது; இறுதிக்கட்டமாகத்தான் தனியாருக்கு ஒதுக்கப்படுகிறது."

12 ஆண்டுகளில் [illegible] காணவிருக்கும் வ[illegible]

ரூ. 933 கோடி செல[illegible] பல்வேறு திட்டங்கள்[illegible]

[illegible]த் திட்டக் குழுத் துணைத் த[illegible] தரும் தகவல்

சென்னை, நவ 29—

தமிழ்நாடு திட்டக் குழு, போக்குவரத்துத் துறையை எப்படி விரிவுபடுத்துவது என்பது பற்றித் தொலைநோக்குத் திட்டம் ஒன்று தீட்டியிருக்கிறது; இந்தக் குழுவின் சிபாரிசுகள்–திட்டங்கள் பற்றி தமிழ்நாடு திட்டக் குழுத் துணைத் தலைவர் எம். ஜி. இராஜாராம் நிருபர்களிடம் [illegible]றியதாவது:—

"போக்குவரத்து பற்றிய [illegible]தத் திட்டம் ரூ 933 கோடி செலவில் தீட்டப்பட்டுள்ளது; 12ஆண்டுக் காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

தமிழ்நாட்டில் சாலைகளைப் பொறுத்தவரையில், சென்னையையும்— கன்னியாகுமரியையும் இணைக்கும் கிழக்குக் கடற்கரைச் சாலை மிக இன்றியமையாத ஒன்றாகும்; 480 மைல் நீளமுள்ள இந்தச் சாலை அமைக்கப்பட்டால், கடற்கரைப் பகுதிகள் பெரிதும் பயனடைய முடியும்.

வட்டப் பாதை அமைப்போம்

சென்னை நகரைப் பொறுத்தவரையில், போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்கா[illegible] அண்ணா சாலை—பூவிருந்தவல்[illegible] நெடுஞ் சாலை — தெற்குக் [illegible]டற்கரைச் சாலை ஆகியவைகளை இணைக்கும் 'வட்டப் பாதை' அமைக்கலாம்.

அண்ணா சாலைக்கு [illegible] இணையாக மேலும் ஒரு சாலை [illegible]ட வேண்டும்; கார்கள் [illegible]றுத்துவதற்காக பல அடுக்குக் கட்டடங்கள் கட்டவேண்டும்; இது தவி[illegible] கிராமப்புறங்களிலும் — ந[illegible] [illegible]ளிலு[illegible] சாலைகளை மாற்றிப் பு[illegible] மாதிரியில் — நவீன சாலைகளை அமைக்க வேண்டும்.

பாதாள இரயிலுக்குச் சிபாரிசு

சென்னை நகரில் இரயில்வேயைப் பொறுத்தவரையில், பூமிக்கு அடியில் செல்லும் பாதாள இரயில்கள் விடுவதற்குச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது; ரூ. [illegible]00 கோடி செலவில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தலாம்.

இது தவிர, அகல இரயில் பாதை — குறுகிய இரயில் பாதை இரண்டையும் இணைக்கும் வகையில், சென்னை நகரைச் சுற்றிச் சுற்று வட்ட இரயில் பாதை அமைக்க வேண்டும்.

அகல இரயில் பாதைகள்

கரூர்—மதுரை, மதுரை—விருதுநகர், மணியாச்சி—தூத்துக்குடி, மணியாச்சி—திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள குறுகிய இரயில் பாதைகளை அகல இரயில் பாதைகளாக மாற்ற வேண்டும்; இது தவிர, சென்னை—விழுப்புரத்திற்கும் அகல இரயில் பாதை அமைக்க வேண்டும்.

போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்காகச் சென்னையிலிருந்து அரக்கோணம் வரையில மின்சார இரயில் பாதைகளாக மாற்ற வேண்டும்.

சேதுசமுத்திரத் திட்டம்

தமிழ்நாட்டில் சேதுசமுத்திரத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்; ரூ. 37.50 கோடி செலவில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

தூத்துக்குடி துறைமுகம், வேகமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

இதுபோல், கடலூரிலுள்ள துறைமுகத்தையும் விரிவுபடுத்தவேண்டும்; இதற்காக ரூ. 20 கோடி செலவழிக்க வேண்டும்.

சென்னை நகரிலுள்ள துறைமுகத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும்; இதற்காக ரூ. 12 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

படகுப் போக்குவரத்து

இப்போது கூவம் திட்டம் வே[illegible]மாக நிறைவேற்றப்பட்டு [illegible]கிறது; கூவம் ஆற்றில் படகுப் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யலாம்; இது தவிர, சென்னைத் துறைமுகத்திலிருந்து நேரடியாகவே படகுகளில் பொருள்களை ஏற்றிச்செல்ல வசதிசெய்ய வேண்டும்.

இது தவிர, பக்கிங்காம்—வேதாரண்யம் கால்வாய் ஆகியவை[illegible]களையும் சீரமைக்க வேண்டு[illegible] இவைகளுக்காக ரூ. 10 கோ[illegible] செலவாகும்.

புதிய விமான நிலையங்கள்

சேலம், தூத்துக்குடி, கன்னியா[illegible]குமரி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் புதிய விமான நிலையங்களை ஏற்படுத்த வேண்டும்.

சென்னை நகரத்திற்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு வசதியா[illegible] [illegible] சென்னையிலிருந்து மாமல்ல[illegible] [illegible]ரங்கல் [illegible]ான் [illegible]ங்களுக்கு எலிகாப்டர் [illegible]னப் போக்குவரத்துக்கு ஏ[illegible] செய்ய வேண்டும்.

பலருக்கு வேலைவாய்ப்[illegible]

இந்தத் திட்டங்களெல்லாம் நிறை[illegible]வேற்றப்பட்டால் ஏறத்தாழ 6[illegible] இலட்சம் பேர்களுக்கு வே[illegible]வாய்ப்புக் கிடைக்கும்."

நாஞ்சில் மனோகரன் மீது நடவடிக்கை

தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் தலைவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்

பேரவைத் தலைமைச் செயற்குழுக் கூட்ட முடிவுகள்

சென்னை, நவ. 30—

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 29-11-72 சென்னை—தேனாம்பேட்டை 'அன்பகத்'தில் துணைத் தலைவர் என். வி. என். சோமு தலைமையில் நடைபெற்றது.

பேரவைப் பொதுச்செயலாளர் காஞ்சி சோமால் எம்.எல்.சி. கடந்த செயற்குழுக் கூட்டத்திற்குப் பின்னர் இதுவரை பேரவை மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி விளக்கினர்; அதனைச் செயற்குழு ஒருமனதாக அங்கீகரித்தது.

கூட்டத்தில் கலந்துகொண்ட செயற்குழு உறுப்பினர்கள் கருத்துக்கள் தெரிவித்து விவாதித்தபின், கீழ்க்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

1. நாடு சுதந்தரமடைந்து மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் முடிந்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடியெடுத்து வைக்கின்ற 1967-ம் ஆண்டு வரையில், தமிழகத்துத் தொழிலாளர்கள் வாழ்வில் இருந்த நிலைமைகளைவிடக் கழக அரசு அமைந்ததற்குப் பின்னால் தொடர்ந்து தொழிலாளர்கள் வாழ்வில் முன்னேற்றம் கிடைத்திடத்தக்க நிலைமைகள் இருந்து வருகின்றன; இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் தொழிலாளர்களின் பிரச்சினைகள் எழுகின்றபோது தொழிலாளர்களுக்குப் பக்கபலமாக இருந்து உரிய உதவிகளைச் செய்வதிலும் — கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தருவதிலும் — அரசுத் திட்டங்கள் அனைத்திலும் ஏழைகள், விவசாயிகள், நெசவாளர்கள் ஏனைய அனைத்துத் துறைத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கான கண்ணோட்டத்துடனேயே கழக அரசு காரியங்கள் ஆற்றிவருவதனாலும் — தொழிலாளர்கள் கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடைபெறுகின்றபோது ஏற்பட்டுவிடுகின்ற வழக்குகளில் கூட முந்தைய அரசு கையாண்ட முறையிலிருந்து மாறுபட்டுத் தொழிலாளர்களுக்குச் சாதகமான நடவடிக்கைகளைக் கையாண்டு வருகின்ற வகையிலேயும் தொழிலாளர்கள் நலம் பேணும் அரசாகக் கழக அரசு இருந்துவருகின்ற காரணத்தால், அதனைக் கட்டிக் காம்பாற்ற வேண்டியது தொழிலாளர்களுடைய கடமை [illegible]ன்கின்ற வகையில் இந்த [illegible]ரசுக்கு எல்லா [illegible] பேரவை உறு[illegible] [illegible]ழைத்து வரு[illegible] [illegible]க்கப்படுகிறது; இந்த அரசுக்குக் குந்தகம் விளைவிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரின் பொய்ப் பிரசாரத்தை முறியடிப்பதில் பேரவையின் சார்பில் தொடர்ந்தும் — தொய்வின்றியும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

2. தொழிலாளர் நலனைத் தொடர்ந்து பேணிக் காப்பாற்றி வருகின்ற இந்த அரசுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் — (அ) தொழிலாளர்களுக்கு எவ்வகையிலும் நலன்களைத் தராமல் பாதகத்தை மட்டுமே தருகின்ற வகையிலும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகவ[illegible] 25—11—72-ல் [illegible] அர்த்தால் ஊக்[illegible]

வடிக்கைகளிலும் — (ஆ) தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் நலன்களுக்கு முரணான நடவடிக்கைகளிலும் ஈடுபட்ட காரணங்களால் மனோகரன் எம்.பி., எஸ். ஆர். இராதா, இரா. மா. பொன்னுசாமி ஆகியோரை தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இருந்து விலக்கி விடுவது என்று இந்தச் செயற்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

3. நாடாளுமன்றத்தில் தாக்கலாகியுள்ள போனசு சட்டத் திருத்தத்தில் தொழிலாளர்களுக்கு நலன் தருகின்ற கீழ்க்காணும் வகையான பரிகாரங்களுக்கு விதிகள் சேர்க்கப்படாத காரணத்தால், உத்தேசத் திருத்தச் சட்டத்திற்குப் பேரவையின் சார்பில் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதுடன், கீழ்க்கண்ட வகையில் பரிகாரம் கிடைத்திட வேண்டியது அவசியம் என்று இந்தச் செயற்குழு ஒருமனதாகத் தீர்மானிக்கிறது:—

(அ) இரயில்வே, அஞ்சல் — தந்தி, வெடி மருந்துத் தொழிற்சாலை, டாங்க் பாக்டரி, குளோத்திங் பாக்டரி, துப்பாக்கித் தொழிற்சாலை உள்ளிட்ட ஏனைய அரசுத் துறை தொழில்கள் ஆகிய அனைவற்றிலும் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் போனசு சட்டம் பொருந்தும்படி செய்ய வேண்டும்;

(ஆ) போனசு சட்[illegible]த்தில் உள்ள '20 சதவிகிதம்' என்ற உச்சவரம்பினை நீக்கிவிட வேண்டும்;

(இ) இந்த ஆண்[illegible] [illegible] லாளர்களுக்கு வழங்[illegible] [illegible] சுத் தொகையி[illegible] [illegible]தைய ஆண்டின் தொகையினையோ அல்லது சமமான சதவிகிதக் கணக்கின் மு[illegible]வைத்தோ வித்தியாசத் தொகையை பிராவிடண்டு நிதியில் சேர்த்துவிடுகின்ற போனசு அவசரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதியினை நீக்கிவிட வேண்டும்;

(ஈ) போனசுத் தொகை கணக்கிடப்படுகின்றபோது, வீட்டு வாடகைப் படி — நகரஈட்டுப் படி — உற்பத்திக் கமிஷன் போன்ற — ஊழியர்களுக்குக் கிடைக்கின்ற ஏனைய[illegible] [illegible]யிலான அனைத்து[illegible] [illegible]னங்களும் [illegible]

கப்பட்ட சங்கங்களோ, அமைப்பைச் சார்ந்த செயற்குழு — பொதுக்குழு உறுப்பினர்களோ முரணாக நடந்தால் அவற்றின் மீது மத்திய செயற் குழு தக்க நடவடிக்கை எடுப்பதற்குப் பொதுச் செயலாளருக்கு இந்தச் செயற்குழு அனுமதி வழங்குகிறது; இவ்விதம் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் அடுத்துக் கூடுகின்ற செயற் குழுவில் பரிசீலனைக்கு வைக்கப்படும்.

5. பேரவையினுடைய கணக்கு ஆண்டு சனவரி முதல் டிசம்பர் முடிய என்கின்ற வகையில் செயல்படுத்தப்படவேண்டுமென என்று இந்தச் செயற்குழு தீர்மானிக்கிறது.

6. கடந்த செயற்குழு தீர்மானப்படி மாவட்டங்களில் உள்ள பொதுக் குழு உறுப்பினர்களின் குழு நடவடிக்கைகள் சம்பந்தமாகச் செயல்முறைகளை [illegible]வகுத்துக் கொள்வது பற்றி[illegible] [illegible]வரக்குறிப்பினைப் பொதுச் [illegible]செயலாளரால் அளிக்கப்பட்டு—அ[illegible]னைச் செயற் குழுவில் கலந்து[illegible] கொண்ட உறுப்பினர்கள் [illegible]வாதித்து — இது பற்றி அடுத்த [illegible]செயற் குழுவில் முறைப்படுத்த[illegible] தீர்மானிப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

7. இதுவரை பேரவையில் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களிலிருந்து — இந்த ஆண்டிற்குரிய பேரவை இணைப்புக் கட்டணம் செலுத்தி இணைக்கப்பட்டுவிட்ட சங்கங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பியுள்ள 119 பொதுக் குழு உறுப்பினர்களின் பட்டியலை இந்தச் செயற்குழு அங்கீகரிக்கிறது.

8. (அ) பேரவையில் இணைப்புக் கட்டணம் முழுமையும் செ[illegible]தியிருந்தும் இதுவரையி[illegible] பொதுக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு பட்டியல் அனுப்பாதவர்கள் உடன[illegible]யாக சங்கங்களின் பொது உறுப்பினர் கூட்டத்[illegible]க்கூட்டச்செய்து பேரவைப் பொதுக்குழு உறுப்பினர் தேர்தலை நடத்தித் தகவலைப் பேரவைக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

[illegible] இந்த ஆண்டிற்குரிய [illegible] இணைப்புக் கட்டணத் [illegible]த்த[illegible] முன்னேற்றச் [illegible] [illegible]ந்தத் தொகையை செலு[illegible]துவதற்கும், பொதுக்குழு உறுப்பினர்களைத்தேர்ந்தெடுத்[illegible] அனுப்புவதற்கும் டிசம்பர் மா[illegible] 31-ந் தேதி வரை காலக்[illegible] அளிப்பது என்று இச்செய[illegible] தீர்மானிக்கிறது.

9. அடுத்தசெயற்குழுக் கூ[illegible] மதுரையில் [illegible] பேர[illegible]

தமிழகத் தொழில் வளர்ச்சிக்கு ரூ. 2,255 கோடி

'சேலம் இரும்பாலைக்கு ரூ. 360 கோடி ஒதுக்குக'

தமிழகத் திட்டக் குழு பரிந்துரை— 12 ஆண்டுத் திட்டம்பற்றி விளக்கம்

சென்னை, நவ. 30—

தமிழ்நாடு திட்டக் குழு உருவாக்கியுள்ள அறிக்கை தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விவரங்களைத் [illegible]மிழ்நாடு திட்டக் குழு உறுப்பினர் திரு. என். மகாலிங்கம் நிருபர்[illegible] விளக்கினர்; அவர் கூறியதாவது:—

[illegible] குழு சார்பில் [illegible] அறிக்[illegible] [illegible] சார் [illegible] முழு[illegible] [illegible]ல் அமைச்ச[illegible] [illegible]றுக் கொண்ட[illegible] [illegible]டுத் (1972–[illegible]

இந்தத் திட்டம், அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்; திட்டக் குழு தயாரித்துள்ள அறிக்கையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்காக மொத்தம் ரூ. 2,255 கோடி தேவை என்று முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

மொத்தம் தேவை என்று குறிப்பிட்டுள்ள ரூ. 2,255 கோடியில் ரூ 98.50 கோடி—மாநில அரசின் தொழில் வளர்ச்சித் துறைக்கு ரூ 785 கோடி—மத்திய அரசால் ஏற்று நடத்தப்படும் தொழில் துறைகளுக்கு ரூ. 30 கோடி — கூட்டுறவுத் துறைக்கும் ரூ 50 கோடி— தொழில் ஆராய்ச்சித் துறைக்கு ரூ. 1,291.50 கோடி என்ற அளவிலும் தனியார் அரசினர்

தொழில் துறைகளுக்கும் செலவிடப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் முக்கியமாக [illegible]சலம் [illegible]ருக்குத் [illegible] தொ[illegible] சாலைக்கு ரூ. 360 கோடியு[illegible] அதை விரிவுபடுத்தும் திட்டத்துக்காக ரூ. 100 கோடியும் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஒரு சர்க்கரை ஆலை தொடங்கவும்—அதற்கு ரூ. 48 கோடி ஒதுக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது; இதற்காகத் தஞ்சை மாவட்டத்தில் உள்ள நெல் பயிரிடும் நிலங்களை மாற்றியமைக்கவும் திட்டத்தில் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

நெல் உற்பத்தியை அதிகப்படுத்தும் புதிய ரகவிதைகளையும், அதைப் பயிரிடும்விதம் பற்றியும் எடுத்துக் கூறியுள்ளோம்; அந்த முறைகள் ஏற்றுக்கொள்ளப் படுமானால், தஞ்சை மாவட்டத்தில் அதிகமான நெல் விளைவிக்க முடியும்.

தஞ்சை மாவட்டத்தில் இப்போது மொத்தம் 13 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் பயிரிடப்படுகிறது; இதில் இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிட உதவும் வகையில் மாற்றியமைப்பதற்கான ஆலோசனையும்கூறப்பட்டிருக்கிறது.

துணி உற்பத்தி தமிழகத்தில் ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து வருகிறது; பெரும்பாலும் ஆலைத் துணிகளையே மக்கள் அதிகம் விரும்புகிறார்கள்; இதனால் விசைத்தறி—கைத்தறித் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்; எனவே ஆலைத் துணிகளை மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்துக் கொண்டால், விசைத்தறி—கைத்தறி துணிகளுக்கும் வரவேற்பு இருக்கும்; இதற்காக 5 அல்லது 6 விசைத்தறி — கைத்தறித் தொழிற்சாலைகளை நிறுவ[illegible] ஆலோ[illegible] கூறப்பட்டுள்ளது[illegible]

ஆலைத் துணி[illegible] [illegible]விசைத்த[illegible] கைத்தறித் துணிகள் போட்டிபோட முடியாததால், மத்திய அரசு ஒரு கூட்டுச் சந்தை (ஜாயின்ட் மார்க்கெட்)யை ஏற்படுத்த முன்வர வேண்டும்.

ஆலைத் துணி உற்பத்தியை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துக் கொண்டால், கைத்தறித் துணிகள் உற்பத்தியை இரு மடங்காக உயர்த்த வழியுண்டு; இதனால் பல தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சிறு தொழில் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் சிறு தொழிற்சாலைகளுக்குத் தங்கு தடையின்றி தேவையான பொருட்களை தருவித்து [illegible]தவுவதற்கு வழிவகைகளை கூ[illegible]ம் ஆலோசனைகளும் கூறப்பட்[illegible]ளன."

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கண்டனம்

கலை வ[illegible] கொலை[illegible]

ம. பொ. சி. குமுறல்

சேலம்—வேலூரில் முதலமைச்சர் கலைஞர் அவர்களைத் தாக்க நடந்த முயற்சியைக் கண்டித்து சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் கூறியிருப்பதாவது:—

சேலம்–வேலூரில் முதல்வர் கலைஞருக்கு எதிராக நடந்த சதிச் செயலைப் பத்திரிகைகளில் படித்து திடுக்கிட்டேன்; இதற்குப் பொறுப்பானவர்களை —அவர்கள் எந்தக் கட்சியினராயினும்— மனித நாகரிகத்தின் விரோதிகளாகவே கருதவேண்டும்.

'அண்ணா வழி — அண்ணா வழி' என்று ஒரு மூச்சுக்கு மூன்று முறை கூறும் எம். ஜி. ஆர். 'இது அண்ணா வழியா' என்ப

...றையை ...க நடவடிக்கை

...மீறும் நிறுவன...களுக்கு ...அபராதம்

... வரம்பில் குறைப்பு இல்லை

சென்னை, நவ. 30—

...ருக்குறை நிலைமையைச் சமாளிக்கத் ...து முடிவுகளைச் ...கிறது.

...சிகளை ஒரு ... இரண்டாகக் ...தக நிலையங்களில் ... மேல் ...மின்சாரத்துக்கு மும் ... கட் ...பது ஆகியவை ... முடிவுகள் டிசம்பர் 7-ந் தேதி ...

...பயோகத்துக்கான உச்சவரம்பு ... யூனிட் ...75 யூனிட் ஆகக் குறைக்கும் ... இப் ...பல்படுத்தப்பட மாட்டாது.

மின்சாரத் ... நிலைமை குறித்து மின்சா... துறை அமைச்சர் ஓ. பி. ...ராமன்—பொதுப் பணித் துறை ... செயலாளர் ஏ. பத்மநாபன்—மின்சார வாரியத் தலைவர் சி ஜி. ரங்கபாஷ்யம் ஆகியவர்களுடன் நேற்று முதலமைச்சர் கலைஞர் ஆலோசனை நடத்தினர்.

"மின்சாரத் தட்டுப்பாடு நிலைமை குறித்து வி...திக்கப்பட்டது. தட்டுப்பா... காரணமாகத் திரைப் பட... காட்சிகளின் எண்ணிக்கை... குறைப்பது என்று ... செய்யப்பட்டுள்ளது.

இதன்படி தின... கொட்டகைகள் ஒரு ...க்கு இரண்டு காட்சிகள் ...டுமே நடத்தலாம். (இப்... நாளைக்கு மூன்று காட்சி... நடத்தப்படுகின்றன; இது ... தவிர சில திரைப்படக் கொட்டகைகளில் ஞாயிறுதோ... காலைக் காட்சிகளும் நடை...கின்றன; இப்போது ...க்கப்பட்ட முடிவைத ... காலைக் காட்சி—பகல் ... போன்றவை ரத்து... செய்யப்பட்டு ஒரு நா... 2 காட்சிகள் மட்டுமே ... பெறும்.)

மின்சாரம் ...ருக்... காரணமாக வெட்டு... செய்த வர்த்தக நிலையங்...ளுக்கு ஒதுக்கப்பட்ட மின்சார யூனிட்டுகளின் உச்சவரம்பு அளவு மீறப்பட்டால்—அவ்வாறு மீறப்பட்டு அதிகமாகச் செலவழித்த யூனிட்டுகளுக்கு இரு மடங்கு மின் கட்டணம் வசூலிக்க வேண்டும் என்று இப்போது விதி உள்ளது; அவ்வாறு கூடுதலாக செலவிடப்படும் யூனிட்டுகளுக்கு மூன்று மடங்கு கட்டணம் வசூலிக்கப்படும்.

வீட்டுத் தேவைகளுக்கான (விளக்கு எரிப்பு போன்றவை) மின்சாரத்தைப் பொறுத்தவரையில், மின் பற்றுக்குறை காரணமாக நூறு யூனிட்டுகள் வரை ஒரு மாதத்திற்குச் செலவிடலாம் என்று உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது; இதை 75 யூனிட்டுகளாகக் குறைக்க வேண்டும் என்று மின்சார வாரியம் சிபாரிசு செய்திருந்தது; இதனால் பெரும்பாலான பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற முறையீடு காரணமாக இந்த யோசனையை இப்போதைக்கு நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று முதல்வர் முடிவு செய்திருக்கிறார்.

அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய சிக்கன நடவடிக்கை முடிவுகள் டிசம்பர் 7-ந் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.

"தமிழக மின்சாரப் பற்றுக் குறையைச் சமாளிக்க கேரள மாநில அரசிடம் மின்சாரம் கொடுத்து உதவும்படிக் கேட்டிருக்கிறோம்; டிசம்பர் 15-ந் தேதி வாக்கில் இது கிடைத்து விடக்கூடும் என்று நம்புகிறேன்."

... இருப்பவை

...துக்கூட்டங்கள்

2—11—72

...னை 7-வது வட்டம்

...எஸ். பாண்டியன் பகுத்...வு படிப்பகச் சார்பில் மாலை 7 ...ரிக்கு வண்ணை ஆண்டியப்ப ...லி தெருவில் (துர்க்கா கபே அருகில்); தலைவர்: கே. மணி; பேசுவோர்: புலவர் அறிவுடைநம்பி எம்.எல்.சி., கோவை. மு இராமநாதன் எம்.எல்.சி., கவிஞர் குடியரசு என்.வி.என். செல்வம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., த. வெ...கடேசன் எம்.சி., இரா. மு. மனோகரன் எம்.சி., வி. எஸ். ஆனந்தன் எம்.சி., வி. எம். கருப்பையா மற்றும் பலர்.

பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றத் துவக்க விழா

சென்னை 2-வது வட்டத்தில் அமைக்கப்பட்ட எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றம், 'பேரறிஞர் அண்ணா நற்பணி மன்றம்' என்ற பெயரில் துவக்கப்படுகிறது; துவக்க விழா, 2—12—72 காலை 8 மணிக்கு இராயபுரம் மார்க்கெட் சந்தில் நடைபெறும்; தலைவர்: கே. பி. பாண்டியன்; திறப்பாளர்: மு. வேதாசலம் எம்.எல்.ஏ; கொடியேற்றுபவர்: பி. ஏ. என். இராசரத்தினம்; அண்ணா படத் திறப்பாளர்: கே. எம். கண்ணபிரான் எம்.சி.; கலைஞர் படத் திறப்பாளர்: இரா. மு. மனோகரன் எம்.சி.; பேசுவோர்: கே. துரைராசு எம்.சி., வி. எஸ். ஆனந்தன் எம்.சி., டி. வெங்கடேசன் எம்.சி., மு. நடராசன், ஏ. இராசகோபால், டி. எஸ். வேலன், அ. புகழேந்தி, டி. நடராசன், மற்றும் வட்டச் செயலாளர்கள்.

பொன்னேரி வட்ட தி. மு. க. கூட்டம்

பொன்னேரி வட்ட தி.மு.க. கூட்டம் 3—12—72 காலை 10 மணிக்கு சோழவரம் உயர்நிலைப் பள்ளியில், மாவட்டச் செயலாளர் கே.டி.எஸ். மணி தலைமையில் நடைபெறும்; தி. சு. இலட்சுமணன் எம்.பி., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., ஆ. கிருட்டினன் ஆகியோர் கலந்து கொள்வர்; வட்ட உறுப்பினர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் மு. கேசவன் கேட்டுக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக நிறு- இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, ... இந்த வெளியிடப்படுகிறது.

குடிசைவாசிகட்குக் குடிமனைப் பட்டா

687 கிராமங்களில் 50,000 பேர் பயனடைவர்

சென்னை, நவ 30—

"சென்னை ... எல்லைக்குள்ளும், புறநகர்ப் பகுதிகள் செங்கற்பட்டு மாவட்டத்தின் பல தாலுக்காக்கள் ஆகிய இடங்களிலும் ஆக்கிரமிக்கப்பட்ட—ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் குடிசைகள் போட்டுள்ளவர்களுக்கு அந்த நிலங்களைப் பட்டா செய்துகொடுக்கத் தமிழக அரசு முடிவுசெய்துள்ளது; இதனால் 687 கிராமங்களில் சுமார் 50,000 தாழ்த்தப்பட்டவர்கள் – பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த ஏழை மக்கள் பயன்பெறுவார்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நிருபர்களிடம் தெரிவித்தார்; தமிழக அமைச்சரவைக் கூட்டம் நேற்று காலை கோட்டையில் சுமார் 2-மணிநேரம் நடைபெற்றது; முதலமைச்சர் தலைமை வகித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை விளக்கி நிருபர்களிடம் கூறியதாவது:—

"சென்னை மாநகராட்சி எல்லைக்குள் குடிசை மாற்று வாரியத்திற்குத் தேவையான பகுதிகள் தவிர மற்றுமுள்ள ஆக்கிரமிக்கப்பட்ட—ஆட்சேபனையற்ற சிறிய குடிசைப் பகுதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் (கலெக்டர்) குடிசை மாற்று வாரியத்தைக் கலந்துகொண்டு அந்தப் பகுதி மக்களுக்கு நிபந்தனையுடன் பட்டா செய்து கொடுக்கலாம்—என்று அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.

மாநகராட்சி எல்லைக்கு வெளியே—சைதாப்பேட்டை, செங்கற்பட்டு, திருப்பெரும்புதூர், திருவள்ளூர், பொன்னேரி ஆகிய தாலுக்காக்களைச் சேர்ந்த பகுதிகளில் ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டுள்ள—ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்கள் நிபந்தனைகளுடன் அதில் வசிப்பவர்களுக்கே பட்டா செய்து கொடுக்கப்படும்; ஆனால் இந்தத்தாலுகாக்களில் புதிதாக யாரும் ஆக்கிரமிப்புச் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்; இதனால் மொத்தம் 687 கிராமங்களில் சுமார் 50,000 அரிசன—பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த ஏழை மக்கள் பயன் பெறுவார்கள்.

தலைநகர வளர்ச்சிக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நகர வளர்ச்சித் திட்ட வரைவு விவரம் பாதிக்கப்படாத வகையில் இந்தப் பட்டாக்கள் வழங்கப்படும்.

சென்னை மாநகருக்கு வகுக்கப்பட்டுள்ள முறை மதுரை—திருச்சி—கோவை ஆகிய நகரங்களுக்கும் பொருந்தும்; அந்த நகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் வீட்டு வசதி வாரியத்தைக் கலந்து முடிவு எடுப்பார்.

இந்த ஆண்டு ஜூன் 30-ந் தேதி வரையில் குடியேறி உள்ள இடங்கள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

நகர எல்லைக்குள் 750 சதுர அடிக்கு மேற்படாமலும், மற்ற இடங்களில் மூன்று செண்டுகளுக்கு மேற்படாமலும் பட்டா வழங்கப்படும்.

சென்னையில் புதிய ஆக்கிரமிப்பு கூடாது என்று சொல்லியிருக்கிறோம்; அது செயல்படுத்தப்படும்."

சட்ட... பேரவைக்கு ஆளுநர் குறிப்பு

அரசி...ல் சட்டப் பிரிவின்படி நடவடிக்கை

சென்னை, நவ. 30—

"டிசம்ப... தேதி சனிக்கிழமையன்று கூடும் தமிழ்நாடு சட்டப் பேரவை 8 நிகழ்ச்சிகளைப் பரிசீலிக்க வேண்டும்" என்று ...டுக்கொண்டு தமிழ்நாடு ஆளுநர் கே.கே. ஷா, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு செய்தி அனுப்பியுள்ளார்; அரசியல் சட்ட 175 (2)-வது பிரிவின்படி ஆளுநர் (கவர்னர்) இச்செய்தியை விடுத்துள்ளார்.

சட்டமன்ற... கூடியதும் கேள்விநேரம் நடக்கும்; அதன் பிறகு ஆளுநரின் செய்தி படிக்கப்படும்.

இரண்டு ...ன மானியக் கோரிக்கைகள் உட்பட 8 பொருள்க... ...த்து விரைவில் ஆய்வு செய்யும்படி ஆளுநர் த... செய்தியில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு மி... ...ின் 1972—73-... ...ன நிதி அறிக்கை... ஆண்டுக்கா... அறிக்கை,

1972—73-ம் ஆ... துணை மானிய ...

நாடாளுமன்றம் இ... சியல் சட்ட (30-... மசோதாவுக்கு ... அளித்தல்,

தமிழ்நாடு விவசா... வரி திருத்த ம... ஆய்வுக் குழு அறிக்... பரிசீலித்தல்.

தமிழ்நாடு விவசாய வருமான வரி (திருத்த) அவசரச் சட்டத்துக்கும் பதிலான மசோதா.

குதிரைப் பந்தய வரி திருத்த அவசரச் சட்டத்துக்குப் பதிலாக இயற்றப்பட்டுள்ள மசோதா.

தமிழ்நாடு மாவட்டக் காவல் துறை மசோதா.

...ட்டப் பேரவை விதிகளின்கீழ் அறிவிப்புக் கொடுக்கப்பட்டுள்ள வேறு பிற அலுவல்கள்.

...வைகள் அனைத்தையும் இயன்ற அளவில் விரைவில் ஆய்வு செய்யும்படி ஆளுநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

1972—73-ம் ஆண்டுக்கான செலவு குறித்த இரண்டாவது துணை நிதி அறிக்கையை முதலமைச்சர் தாக்கல் செய்வார்.

1972—73-ம் ஆண்டுக்கான நிதி அறிக்கை மீதும் 1971—72-ம் ஆண்டுக்கான துணை நிதி நிலை அறிக்கைமீதும் மின்சார அமைச்சர் ஓ. பி. இராமன் விவாதத்தைத் துவக்கி வைப்பார்.

சட்டமன்றப் பேரவை காலை 11 மணிக்கும், மேலவை மாலை 4-மணிக்கும் கூடும்.

175(2-வது) பிரிவு கூறுவது என்ன?

ஆளுநர் செய்தி சம்பந்தமாக அரசியலமைப்புச் சட்டத்தின் 175 (2)-வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது:—

"ஆளுநர் மாநிலச் சட்டமன்றத்துக்கு அல்லது மன்றங்களுக்கு (பேரவைக்கும், மேலவைக்கும்) அவ்வப்போது சட்டசபையில் உள்ள ஏதேனும் ஒரு மசோதா பற்றியோ, வேறு எது பற்றியோ செய்தி அனுப்பலாம்.

எந்த அவைக்கு அவ்வாறு செய்தி அனுப்பப்பட்டதோ அந்தச் செய்தியில் உள்ள விஷயத்தை இயன்ற அளவில் துரிதமாக ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்."

தமிழக ஆளுநர் மீதான வழக்கு

வாதங்கள் முடிந்தன

சென்னை, நவ. 30—

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தொடரை முடித்துவைத்து ஆளுநர் கே. கே. ஷா பிறப்பித்த உத்தரவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 'ரிட்' மனுக்கள்மீது இரு தரப்பினரின் வாதங்களும் முடிவடைந்தன.

இதன்மீது தீர்ப்புக் கூறுவதை புல் பெஞ்சு ஒத்திவைத்தது.

சமாசாயகர், கே. ஏ. மதியழகன்—எம். ஜி. இராமச்சந்திரன்—கம்யூனிஸ்டுத் தலைவர் கே. டி. கே. தங்கமணி எம்.எல்.ஏ. ஆகியவர்கள் இந்த மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார்கள்.

முதலில் நீதிபதி இராமபிரசாத் ராவ் முன்பு இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இது அரசியலமைப்புச் சட்டம் பற்றிய முக்கியமான பிரச்சினைகளை எழுப்புவதால், ஒரு புல் பெஞ்சு விசாரிக்க வேண்டும் என்று அவர் உத்தரவிட்டார்.

அதன்மீது தலைமை நீதிபதி கே. வீராசாமி—நீதிபதி டி. இராமப்ரசாத ராவ்—நீதிபதி பால் ஆகிய மூவர் கொண்ட ஒரு புல் பெஞ்சு நியமிக்கப்பட்டது.